*கவனிக்க.-2021.11.12 ஆந் திகதிய 2254ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (அ), பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2255 - 2021 නොවැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2021.11.19

*2255ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1589 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | 1584 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1585 | ஏல விற்பனைகள் | 1591 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) தாவர விலங்கினப் பாதுகாப்பு (திருத்தம்) சட்டமூலம் 2021, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல் (திருத்தம்) சட்டமூலம் 2021, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1583 - B 082289 - 405 (2021/11)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

**Procurement for the supply of 100 Nos.5 Ton capacity Track Jacks ( Ratcher type) to Sri Lanka Railways**

01. இலங்கை,கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுத் (உயர் மட்டம்) தலைவர் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து 100 எண்ணிக்கையான 5 தொன் அளவுள்ள **Track Jacks ( Ratcher type)** ஐ இலங்கை புகையிரத சேவைகளுக்கு சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

02. விலைமனுக்கள் 2021.11.24 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

03. விலைமனுக்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களில் இருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் 2021.11.23 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 3.00 மணி வரையும் 5,500 ரூபாவை அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகையை மாத்திரம் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

04. விலைமனுதாரர் 180,000 ரூபாவை அல்லது இலகுவில் மாற்றக்கூடிய பணத்தை அவர்களின் விலைமனுவின் விலைமனுப் பிணையாக வழங்கல் வேண்டும்.

05. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரதசேவைகள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வாறு திறக்கப்படும் போது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு ( உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

07. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கீழ் வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதிப் பொது முகாமையாளர்,(பெறுகை),
பெறுகை உப திணைக்களம்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது
94(11) 2436818.
தொலைநகல் இல. 94 (11) 2432044.
மின்னஞ்சல் : tender 2@railway.gov.lk
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

Ref No. SRS/F 7773

11- 510

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - சம்மாந்துறை

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.11.28ஆந் திகதிகாலை 09.00மணிக்கு சம்மாந்துறைநீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 08.00 மணிமுதல் 09.00 மணிவரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிடமுடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கானஅதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனையில் பங்குபற்றவிரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப் படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஐ. என். ரிஸ்வான்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை.
2021.11.11.

ஏலவிற்பனை செய்யப்படும் பொருட்களின் விபரம் 2021.11.28

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | B/4891/19 | EP JQ - 3674 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2 | 24025/MT/20 | EP WE - 4913 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | 22474/MT/19 | EP JL - 9043 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4 | 23439/PC/19 | EP JX - 3886 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மட்டும்) | 01 |
| 5 | 22181/MT/19 | Unregistered | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மட்டும்) | 01 |
| 6 | AR/2205/19 | NC BDI - 7179 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7 | 18750/MT/18 | EP MC - 7924 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8 | 22051/MT/19 | EP JK - 2588 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 9 | No Number | | மர இருக்கைகள் | 06 |
| 10 | No Number | | கணினி | 03 |
| 11 | No Number | | பெக்ஸ் இயந்திரம் | 02 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 12 | No Number | | தொலைபேசி | 01 |
| 13 | No Number | | டியூப் லைட் கவர்கள் | 15 |
| 14 | 21820/Misc/19 | | இரும்பு வாளி | 01 |
| 15 | 21820/Misc/19 | | மண்வெட்டி | 01 |
| 16 | 23725/Misc/20 | | இரும்பு வாளி | 01 |
| 17 | 23725/Misc/20 | | சவள் | 01 |
| 18 | 26673/Misc/21 | | சவள் | 03 |
| 19 | 26673/Misc/21 | | இரும்பு வாளி | 05 |
| 20 | 26606/Misc/21 | | சவள் | 01 |
| 21 | 26606/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 22 | 26606/Misc/21 | | இரும்புத் தகடு | 02 |
| 23 | No Number | | இரும்புத் தகடு | 02 |
| 24 | 26301/E/21 | | இரும்புத் தகடு | 01 |
| 25 | 26244/E21 | | பிளாஸ்டிக் பரல் | 01 |
| 26 | No Number | | மண் | 18 Cubes |

*11- 822*

---

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - முல்லைத்தீவு

முல்லைத்தீவு நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் ஏல விற்பனை

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான சான்றுப் பொருட்கள் 2021. 12.11 ஆந் திகதி இந்நீதிமன்ற வளாகத்தில் வைத்து மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**2.** யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமைகோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

**3.** பொது மக்கள் மன்றில் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

**4.** ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

5. விற்கப்பட்ட பொருட்களுக்கு பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள். தேசிய அடையாள அட்டையுடன் சமுகம் தர வேண்டும்.

ரீ.சரவணராஜா,
மாவட்ட நீதிபதி/நீதிவான்,

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

பகிரங்க ஏல விற்பனை - 2021

| இல. | வழக்கு இலக்கம் | விபரம் |
|---|---|---|
| 01. | 9829 (B/747/13) | தண்ணீர் மோட்டார் - 1 |
| 02. | 9345 (B/261/14) | தண்ணீர் மோட்டார் (Singer) - 1 |
| 03. | 9829 (B/747/13) | LED Singer TV - 1 |
| 04. | 7868 (B/505/13) | DVD டெக் (5135) - 1 |
| 05. | 9991 (B/375/14) | என்ஜின் (UVW 0219) - 1 |
| 06. | 13730 (B/593/15) | Samsung Home Theater (1000W) - 1 |
| 07. | 13730 (B/593/15) | மின் அழுத்தி - 1 |
| 08. | 16377 | எரி வாயு கொள்கலன் - 1 |
| 09. | 19988 (B/1075/16) | எரி வாயு கொள்கலன் அடுப்பு - 1 |
| 10. | 20207 (B/1054/16) | தொலைபேசி Octa Phone - 1 |
| 11. | 20207 (B/1054/16) | தொலைபேசி Nokia Phone - 1 |
| 12. | 20921 | ரவுட்டர் -1 |
| 13. | 20921 | றில்லர் - 1 |
| 14. | 20921 | புலோஹ் (Flovar) - 1 |
| 15. | 20921 | பிளேனர் இயந்திரம்- 1 |
| 16. | 22920 (B/1157/16) | தொலைக்காட்சி பெட்டி Dish - 1 |
| 17. | 24267 (B/702/17) | GPS கருவி - 1 |
| 18. | 24692 | இயந்திரம் - 1 |
| 19. | 25307 | மின்பிறப்பாக்கி - 1 |
| 20. | 25633 | Samsung LCD Monitor - 1 |
| 21. | 25633 | மடிக்கணினி உதிரிப்பாகங்கள் set - 1 |

| இல. | வழக்கு இலக்கம் | விபரம் |
|---|---|---|
| 22. | 25633 | Player - 1 |
| 23. | 26576 (B/1045/17) | தண்ணீர்க்குழாய் (40’02’’) - 1 |
| 24. | 26576 (B/1045/17) | தண்ணீர் மோட்டர் - 1 |
| 25. | 27196 | எரிவாயுக் கொள்கலன் - 1 |
| 26. | 30093 (B/1005/18) | மின்பிறப்பாக்கி - 1 |
| 27. | 30430 (B/808/18) | மின்பிறப்பாக்கி - 1 |
| 28. | 33278 (B/282/19) | வீச்சு வலை - 1 |
| 29. | 33907 (B/452/19) | GPS கருவி - 1 |
| 30. | 33907 (B/452/19) | மின்பிறப்பாக்கி - 1 |
| 31. | 34140 (B/645/19) | குளிர்சாதனம் பெட்டி - 1 |
| 32. | 35219 (B/1081/19) | எரிவாயுக் கொள்கலன் அடுப்பு- 1 |
| 33. | 39442 (B/595/20) | எரிவாயுக் கொள்கலன் - 1 |
| 34. | AR/590/16 | தண்ணீர் மோட்டர் - 1 |
| 35. | AR/590/16 | தண்ணீர் மோட்டர் - 1 |
| 36. | AR/389/18 | CD Player with Remote - 1 |
| 37. | AR/389/18 | AMB |
| 38. | AR/389/19 | நீர் கொதிகலன் |
| 39. | முடிவடைந்த வழக்கு | இயந்திரம் - 1 |
| 40. | முடிவடைந்த வழக்கு | இயந்திரம் - 1 |
| 41. | முடிவடைந்த வழக்கு | இயந்திரம் - 1 |
| 42. | முடிவடைந்த வழக்கு | இயந்திரம் - 1 |
| 43. | 17232 | தொலைபேசி (Greentel) - 1 |
| 44. | 17233 | தொலைபேசி (Zigo) - 1 |
| 45. | 17233 | தொலைபேசி (Nokia 1280) - 1 |
| 46. | 32019 (B/1055/18) | தொலைபேசி (Samsung J5) - 1 |
| 47. | 32019 (B/1055/18) | தொலைபேசி (Nokia 1030) - 1 |

| இல. | வழக்கு இலக்கம் | விபரம் |
|---|---|---|
| 48. | முடிவடைந்த வழக்கு | கோடரி - 110 |
| 49. | முடிவடைந்த வழக்கு | மண்வெட்டி - 17 |
| 50. | முடிவடைந்த வழக்கு | சவள் 370 |

11- 624

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, கிருலப்பன மாவத்தை, இல. 25 எனும் முகவரியில் வசிக்கும் கோதாகொட அத்தரகே சோமாவதீ (தே.அ.அ.இல. 426653044V) ஆகிய நான் கொழும்பு 05, கிலுருலப்பன மாவத்தை, இல. 22/11 எனும் முகவரியில் வசிக்கும் விதானகே துலீகா நயந்தி பெரேரா (தே.அ.அ.இல.817410820V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு சாந்தனீ செனெவிரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல.2817 மற்றும் 2020.06.12 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

கோதாகொட அத்தரகே
சோமாவதீ.

11-532

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாணந்துறை, ஹிரன, தந்திரிமுல்லை, தேக்கவத்த, பிரசன்ன பிளேஸ், இல. 360/5 என்ற இடத்தில் குடியிருக்கும் லியனகே துமிந்த நாத் ஜயசுந்தர (தே.அ.அ.இல. 713230456V) ஆகிய நான், 2019.06.09 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சிந்தக எஸ். திசாநாயக்க என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல.50 என்ற அற்றோணித் தத்துவ பத்திரம் மூலம் பாணந்துறை,வலான வடக்கு, கெமுனு மாவத்தை, இல.380/A என்ற இடத்தில் குடியிருக்கும் குருப்பு அச்சிகே தொன் கமல் வசந்த குணரத்ன ( தே.அ.அ.இல. 721370046V)என்பவருக்குவழங்கப்பட்ட அற்றோணித்தத்துவ அதிகாரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாசையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன்.

லியனகே துமிந்த நாத் ஜயசுந்தர.

11- 549

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிரிக்கத்துகே அநுர நந்ததேவ ஆரியரத்ன அல்லது அநுர ஆரியரத்ன (தே.அ.அ.இல. 562001514V) ஆகிய என்னால் இலக்கம் 279/11 கல்தெமுல்ல வீதி, கல்தெமுல்ல, மொரட்டுவ என்ற முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இலக்கம் 807540599V உடைய நிபுனி எகொடகே என்பவருக்கு வழங்கப்பட்டதும், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. தில்ருக எம். சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான விசேட அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

பத்தரமுல்ல, பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் அத்தியாயம் 320, பக்கம் 98, தினப்புத்தக இலக்கம் 13315 இன் கீழ் இவ்விசேட அற்றோணித் தத்துவமானது பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிரிக்கத்துகே அநுர நந்ததேவ ஆரியரத்ன.

11- 648

## விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

உஸ்கல மிரிஹானேகம என்ற முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 685994240V உடைய ஜயகொடி ஆரச்சிகே கெலிஸ்டா பத்மினி ஆகிய நான், இலக்கம் 508, 4சீ/வெலிஹேன கொச்சிக்கடையில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 197824702658 உடைய கோவிண்ண ஆரச்சிகே ருவன்த பிரியலால் என்பவருக்கு வழங்கப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு திருமதி டபிள்யூ. ஏ. கோதமி விஜேசிங்ஹ என்பவரினால் 2021.03.11 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல.1983 ஐ உடைய வடமத்திய வலயப் பிரதிப் பதிவாளர் நாயகத்தின் பணிமனையில்

அற்றோணித் தத்துவப் புத்தகம் 152 ஆம் அத்தியாயம் 12973 ஆம் பக்கம் 264 தினப்புத்தக இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ள விசேட அற்றோணித் தத்துவமானது 2021.11.07 ஆந் திகதி முதல் உடன் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என்சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஜயகொடி ஆரச்சிகே கெலிஸ்டா பத்மினி.

11- 651

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோயன்துடுவ, தலுக்கல வீதி, 524/ 30 என்ற இடத்தில் குடியிருக்கும் மாம்புலகே மிஹிரி ஷசிகலா ( தே.அ.அ.இல. 925081558V) ஆகிய நான், 2021.03.25 ஆந் திகதி கம்பஹா பிரசித்த நொத்தாரிசு திரு. தும்போவிலகே பிரசன்ன தம்மிக்க கருணாசேகர என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்டதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கம்பஹா மேல் நீதிமன்ற வலய அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவ பத்திரபுத்தகத்தில் இல. 96 ஆம் பிரிவில் 94 ஆம் போலியோ பக்கத்தில் 1004 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் கிரிபத்கொடை, மாயா மாவத்தை, 246/5 என்ற இடத்தில் குடியிருக்கும் மாகவிடகே ஞானவதி (தே.அ.அ.இல. 19587631006З) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை 2021.11.15 ஆந் திகதி தொடக்கம் எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாசையின் பேரிலும் உடனடியாக ரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மாம்புலகே மிஹிரி ஷசிகலா.

2021.11.15.

11- 668

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 2010, வைகாசி மாதம் 22 ஆந் திகதியிடப்பட்டு கனடாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வாணி ஹரிசந்திரன் செந்தூரன் முகதாவில் நிறைவேற்றப்பட்டு யாழ்ப்பாணம் உதவிப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அலுவலகத்தில் 32/ 23 அத்தியாயம் பக்கத்தில் நாட்புத்தக இல. 1902 இல் 2010.08.30 ஆந் திகதி எழுத்து மூல அதிகார பதிவில் உரிய முறையில் பதியப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப் பத்திரமானது பிரதான வீதி, நெடுங்கேணி, வவுனியா வடக்கு, இலங்கையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை லிங்கநாதன் (தே.அ.அ.இல. 610242596V) என்பவரின் பெயரில் தற்போது 31, Cedarwood Crest, Brampton, ON, L6X 4G9, canada வில் வசிக்கும் செல்லம்மா பரமநாதன் ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் 2021, கார்த்திகை மாதம் 16 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்துச் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

செல்லம்மா பரமநாதன்.

11- 669

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 2013, புரட்டாதி மாதம் 12 ஆந் திகதியிடப்பட்டு கனடாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வாணி ஹரிசந்திரன் செந்தூரன் முகதாவில் நிறைவேற்றப்பட்டு யாழ்ப்பாணம் உதவிப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அலுவலகத்தில் 76/65 அத்தியாயம் பக்கத்தில் நாட்புத்தக இல. 293 இல் 2014.02.07 ஆந் திகதி எழுத்து மூல அதிகார பதிவில் உரிய முறையில் பதியப்பட்ட விசேட அற்றோணித்தத்துவப்பத்திரமானது பிரதான வீதி, நெடுங்கேணி, இலங்கையைச் சேர்ந்த G.T. லிங்கநாதன் (தே.அ.அ.இல. 610242596V) என்பவரின் பெயரில் தற்போது 31, Cedarwood Crest, Brampton, ON, L6X 4G9, canada வில் வசிக்கும் செல்லம்மா பரமநாதன் ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் 2021, ஐப்பசி மாதம் 26 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

செல்லம்மா பரமநாதன்.

11- 670

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மொறட்டுவ, கட்டுபெத்த, பீ.பி.அல்விஸ் பெரேரா மாவத்தை, திஸ்ஸ பிளேஸ், இல. 20/1 இல் வசிக்கும் மொனிக்கா ஸ்ரீயானி பெரேரா ஆகிய நான், குருநாகல் பகிரங்க நொத்தாரிசு மேனகா மீகொல்ல வினால் பதிவு செய்யப்பட்ட இல. 116 மற்றும் 2018, பெப்புருவரி 19 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தினால் எனது அற்றோணிதாரராக கோட்டே, எத்துல் கோட்டே இல. 622/4 இல் வசிக்கும் மைக்கல் ஷெல்டன் பெரேரா என்பவரை நியமித்ததுடன் இன்று முதல் அதனை இரத்து செய்துள்ளதாக இலங்கை குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மொனிக்கா ஸ்ரீயானி பெரேரா.

11-848

# ஏல விற்பனைகள்

## ஹற்றன் நெசனல் வங்கி பீஎல்சீ – ஊருபொக்க கிளை

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் படி ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

ஹற்றன் நெசனல் வங்கி பீஎல்சீயில் வாசியபட நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். பி. கே. ராஜபக்ஷ அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 349 மற்றும் 2018.08. 31 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக் கொள்ள வேண்டிய கொடுப்பனவில் ரத்னசேகர குருப்பு ஆராச்சிகே திலிப் ரொஹாந்த கடனாளியாக தவறுகை புரிந்துள்ளதாலும், அந்த ஈட்டு முறியின் கீழ் செலுத்த வேண்டிய கொடுப்பனவுத் தொகையை, எல்லாவகையிலும் நிறுவப்பட்ட கொடுப்பனவு மற்றும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் உட்பட சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக ஹற்றன் நசனல் பாங்க் பீஎல்சீ அவர்களால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, கீழே குறிப்பிடப்பட்டஆதனத்தை 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு இந்த ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

### ஆதன இடாப்பு

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கங்கபட பத்து, திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மற்றும் பிரதேச சபை எல்லையினுள் அத்துடாவ மேற்கு, மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அத்துடாவ கிராமத்தில் அமைந்துள்ள கந்தேகெதரவத்த அல்லது திக்கந்தரவத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஏ. சமரக்கொடி அவர்களால் இல. 2063 மற்றும் 2008.11.27 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தின்படி, காண்பிக்கப்பட்ட லொட் 1A என அடையாளமிடப்பட்ட ஒரு ஏக்கர், இருப்பத்திரண்டு தசம் இரண்டு ஐந்து பேர்ச் (1ஏ.00றூ.22.25பே.) விசாலமுடைய காணித்துண்டோடும் மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடங்கள், இலைகுலை ஆகிய அனைத்தோடும்.

தீர்மானம் பற்றிய விளம்பரத்திற்காக .- 2020.08.14 ஆந் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி பத்திரிகை, 2020.08.25 ஆந் திகதியிடப்பட்ட “மவ்பிம”, “டெயிலிமிரர்” மற்றும் “தினக்குரல்” பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- மாத்தறை, தெலிஜ்ஜவில வீதியில் ஒகஸ்பே சந்திவரை சென்று, அங்கிருந்து வலது பக்கம் திரும்பி நாதுகல வீதியில் இன்னும் மூன்று மீற்றர் பயணம் செய்யும் பொழுது காணியைஅடைய முடியும். அந்த காணி வீதியில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

கோவிட் 19 தொற்றுநோயின் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட தனிப்படுத்தல் சட்டத்தின் கீழ் இந்த ஏல விற்பனை நடைபெறும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**-உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். காசோலைகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1) கொள்வனவு விலையின் 10%;
2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
3) ஏலதாரரின் தரகுப்பணம் 2.5%;
4 விற்பனை நிபந்தனைகளை உறுதி செய்வதற்கு நொத்தாரிசுக் கட்டணம் ரூ.2,000.00%;
5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500;
6) முழு விளம்பரச் செலவுகள்.

கொள்வனவுத் திகதியில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்குச் செலுத்த வேண்டும். 30 நாட்கள் தவறினால் கொடுக்கப்பட்ட பணம் 10% திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விட வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதி மற்றும் குறித்த ஆவணங்களைப் பரிசோதிக்க மற்றும் மேலதிக விபரங்களுக்கு, மூத்த முகாமையாளர் (கடன்கள் அறவிடுதல்), ஹற்றல் நெஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இலக்கம் 011-2661826, 011-2661835.

ஜே. டபிள்யு. ஈ. ஜயவர்தன
(முழுத்தீவுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 59, குமார மாவத்தை,
படுவத்த, தோடந்துவ,
தொலைபேசி இல. 091-2277105, 0779-663420
ஈ-மெயில் : ejayawardhana77@gmail.com

11- 398

---

## ஹற்றன் நெசனல் வங்கி பீஎல்சீ – ஊருபொக்க கிளை

(முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் படி ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

ஹற்றன் நெசனல் வங்கி பீஎல்சீயில் வாசியபட நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. அமரசேன அவர்களால் எழுதி

உறுதிப்படுத்தப்பட்ட இல. 14900 மற்றும் 2015.04.20 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் இல.15321 மற்றும் இல. 2016.01.29 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இரண்டின் மற்றும் டி.டி. அபேவிக்ரம அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 4220 மற்றும் 2017.12.18 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இரண்டின் கீழ் பெற்றுக் கொள்ள வேண்டிய கொடுப்பனவில் ரத்னசேகர குருப்பு ஆராச்சிகே துலிப் ரோஹாந்த மற்றும் ஹொரகல கமகே நிஹால் அவர்கள் கடனாளியாக தவறுகை புரிந்துள்ளதாலும், அந்த ஈட்டு முறியின் கீழ் செலுத்த வேண்டிய கொடுப்பனவுத் தொகையை, எல்லாவகையிலும் நிறுவப்பட்ட கொடுப்பனவு மற்றும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் உட்பட சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக ஹற்றன் நெஷனல் பாங்க் பீஎல்சீ அவர்களால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

**ஆதன இடாப்பு**

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும பத்துவ, தவலம பிரதேச செயலாளர் பிரிவினுள் மற்றும் தவலம பிரதேச சபை எல்லையினுள், ஹினிதும வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள் ஹினிதுமயில் அமைந்துள்ள தங்கெதர கும்புர மற்றும் கணேஒவிட என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எல். ஆர். கொடிதுவக்கு அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 476 மற்றும் 1966.08.17 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட பன்னிரெண்டு தசம் ஒன்பது ஆறு பேர்ச் (0ஏ.0றூ.12.96பே.) விசாலமுடைய காணியோடும் மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும்.

அளவை செய்யப்பட்ட அளவையின் படி மேற்குறித்த காணி கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும பத்துவ, தவலம பிரதேச செயலாளர் பிரிவினுள் மற்றும் தவலம பிரதேச சபை எல்லையினுள், ஹினிதும வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள் ஹினிதுமயில் அமைந்துள்ள தங்கெதர கும்புர மற்றும் கணேஒவிட என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.வி.பி.பி. கீர்த்திலால் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. 55/2014 மற்றும் 2015.03.08 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட பன்னிரெண்டு தசம் ஒன்பது ஆறு பேர்ச் (0ஏ.0றூ.12.96பே.) விசாலமுடைய காணியோடும் மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்திற்காக** .- 2020.08.14 ஆந் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி பத்திரிகை, 2020.08.25 ஆந் திகதியிடப்பட்ட மவ்பிம, டெயிலிமிரர் மற்றும் தினக்குரல் பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்**.- உடுகமவில் இருந்து தவலம வீதியில் 11 கிலோமீற்றர் வரை ஹினிதும நுககல சந்தி வரை சென்று,அங்கிருந்து வலது பக்கம் திரும்பி நுககல வீதியில் 50 மீற்றர் செல்லும் பொழுது, காணியை அடைய முடியும். குறித்த காணியின் வீதி வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

கோவிட் 19 தொற்றுநோயின் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட தனிப்படுத்தல் சட்டத்தின் கீழ் இந்த ஏல விற்பனை நடைபெறும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.-உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். காசோலைகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1) கொள்வனவு விலையின் 10%;
2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
3) ஏலதாரரின் தரகுப்பணம் 2.5%;
4) விற்பனை நிபந்தனைகளை உறுதி செய்வதற்கு நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.00;
5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500.00;
6) முழு விளம்பரச் செலவுகள்.

கொள்வனவுத் திகதியில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்குச் செலுத்த வேண்டும். 30 நாட்கள் தவறினால் கொடுக்கப்பட்ட பணம் 10% திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விட வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதி மற்றும் குறித்த ஆவணங்களைப் பரிசோதிக்க மற்றும் மேலதிக விபரங்களுக்கு, மூத்த முகாமையாளர் (கடன்கள் அறவிடுதல்), ஹற்றல் நெஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இலக்கம் 011-2661826, 011-2661835.

ஜே. டபிள்யூ. ஈ. ஜயவர்தன
(முழுத்தீவுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 59, குமார மாவத்தை,
படுவத்த, தோடந்துவ,
தொலைபேசி இல. 091-2277105, 0779-663420,
071- 3358434.
ஈ-மெயில் : ejayawardhana77@gmail.com

11- 399

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவு எல்லையில் கம்மல்பத்து பிட்டிகல கோரளை தெற்கு நாத்தாண்டிய பிரதேச சபை எல்லையினுள் நாத்தாண்டிய மாவட்டச் செயலாளர் எல்லையில் மீகாவெல கிராம அலுவலர் எல்லையில் கட்டுநேரிய கிராமத்தில் உள்ள பாத்தவத்த காணி (வரைபட இலக்கம் 3209 இல் காண்பிக்கப்பட்ட ஒன்றாக்கப்பட்ட லொட் 01 மற்றும் 02 மீண்டும் அளந்து) நில அளவையாளர் வை.எம். ரன்ஜித் யாப்பாவின் 2013.11.14 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 13209 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் 01 .

இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ. 0றூ. 36.00பே.) இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து. இக்காணி மாரவில காணி பதிவகத்தில் J/ 182/ 24 பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இலக்கம் N/47 தெமட்டபிட்டிய சந்தி, கட்டுநேரியவில் வசித்த தற்சமயம் இலக்கம் 750, தெமட்டபிட்டிய ரோட், கட்டுநேரியவில் வசிக்கும் இதன்பிறகு கடன் எடுத்தவர்களான அப்புஹாமிகே நிரணி பிரியங்கா ஹெட்டியாராச்சி ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 657872172V) மற்றும் வர்ணகுலசூரிய மாமுகே நிருக ரோசான் பர்னாந்து என்பவர்கள் பதிவு இலக்கம் PB 676 PQ உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.சிரினா நிலுக்சி திரேசா மூலம் 2014.03.28 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 1616 மூலம் மேற்படி சொல்லப்பட்ட காணியை ஈடுவைத்து கடன் வசதிகள் பெற்றுக் கொண்டுள்ளார்கள். மற்றும் 2019.03.24ஆந் திகதி வரையும் முழுதொகையும் 2019.03.25ஆந் திகதி வரை முற்பணத்தில் வட்டிகள் ஏலத் திகதி வரை கடன் எடுத்தவர்களிடம் இருந்து யூனியன் வங்கிக்கு வரவு உள்ளதாலும் மற்றும் யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ மூலம் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,

மேற்சொல்லப்பட்ட காணியை எங்களால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் 2021, திசெம்பர் 08 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**காணிக்கு செல்லும் விதம்.-** வென்னப்புவ நகர மத்தியில் இருந்து 1.7கி.மீற்றர் ( 200 மீற்றர் 48 ஆவது மைல்கட்டை தாண்டி) கொழும்பு புத்தளம் பிரதான ரோட்டில் சிலாபம் சென்று காணியை பிரதான ரோட்டில் வலது பக்கம் காண முடியும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%;

(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);

(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;

(6) இலிகிதர் கட்டணம் ரூபா 1,000.00 ;

(7) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,500.00.

இந்த ஏல விற்பனை சுகாதார அமைச்சு மூலம் கொவிட் 19 சம்பந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெறும்.

**வேறு விபரங்களுக்கு.-**"சட்டத் திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல.64, காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே.இல.: 0112374100.

எல்.பி. சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,கொழும்பு 12.
தொலைபேசி /தொலைநகல் இல. : 077- 3181891,
011-2445393.

11-387

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வெஉடவில்லி ஹத்பத்துவே, திரகந்தஹயே கோரளை, குருநாகல் மாநகர சபை எல்லையினுள் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் இல.841 என்ற தெற்கு குருநாகல் நகர பெயருடைய கிராம அலுவலர் பிரிவில் வெஹெர கிராமத்தில் அமைந்துள்ள ஜயந்திபுர வீதி, வரிமதிப்பீட்டு இல. 65/ 31 என்ற வளாகம் சம்பந்தமாக அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.எஸ். தஸநாயக்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1853 மற்றும் 2011.09.15 ஆந் திகதியுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட லொட் A காணிப்பகுதி.

இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ. 0றூ. 22பே.) அல்லது 0.05564 ஹெக்டயார். விசாலமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடம், இலை குலை, பழங்கள் ஆகிய அனைத்தும்.

குருநாகல், எதுகல்பிட்டிய, ஜயந்திபுர வீதி, இல. 3/14 என்ற முகவரியில் வசிக்கும் கால்லகே லயனல் பத்மசிறி (தேசிய அடையாள அட்டை இல. 630611172V) ( இதன்பின்னர் கடனாளிகள் என அழைக்கப்படும் ) அவர்களால் கம்பனி பதிவு இலக்கம் PB 676 PQ உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி ( இதன்பின்னர் "யூனியன் பாங்க்" என அழைக்கப்படும்) மூலம் நீண்ட நிதி வசதிகளை மற்றும் பெற்றுக் கொண்டுள்ளதாலும், (இதன் பின்னர் "நீண்டகால நிதி வசதி" எனஅழைக்கப்படும்) மேற்குறித்த கடனாளியின் மூலம் பிரசித்த நொத்தாரிசு எல். சி. சாந்த ரெகவல அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 18505 மற்றும் 2017.11.10ஆந் திகதியுடைய ஈட்டு முறியை எழுதி கையொப்பமிட்டு மேற்குறித்த கடன் வசதிகளினால் யூனியன் பாங்க் மூலம் அறவிடப்பட வேண்டிய மேற்குறித்த கடன் வசதிகள் மற்றும் அதன் மீதுள்ள வட்டிகள் மீள செலுத்துவதற்காக பிணையாக வைத்து மேற்குறித்த ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணியை அடகு வைத்து பிணையாக வைத்துள்ளதாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

ஆதன இடாப்பில் காண்பிக்கப்பட்ட காணி 2021, திசெம்பர் 09 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மேல்சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்கு செல்லும் விதம்.**- குருநாகல் நகரில் இருந்து கொழும்பு வீதியூடாக 1 கி.மீற்றர் வரை பிரயாணம் செய்து குருநாகல் வைத்தியசாலை வளாகத்தைத் தாண்டி அத்தோடு ஜயந்திபுர வீதியில் இடதுபக்கம் திரும்பி, 400 மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது 2 ஆவது ஒழுங்கையில் இடதுபக்கம்திரும்பி மேலும் 150 மீற்றர் தூரம் பிரயாணம் செய்யும் பொழுது குறித்த காணியை அடையமுடியும். அது அந்த வீதியில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%;

(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);

(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;

(6) இலிகிதர் கட்டணம் ரூபா 1,500.00 ;

(7) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,500.00.

இந்த ஏல விற்பனை சுகாதார அமைச்சு மூலம் கொவிட் 19 சம்பந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெறும்.

**வேறு விபரங்களுக்கு.**-"சட்டத் திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல.64, காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே.இல.:0112374100.

எல்.பி. சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,கொழும்பு 12.
தொலைபேசி /தொலைநகல் இல. : 077- 3242954,
011-2445393.

11-388

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை

### ஆதன இடாப்பு - 1 ஆவது காணி

தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தோட்ட வலல்லாவிட கோரளை, கரந்தெனிய பிரதேச சபை எல்லையினுள், கரந்தெனிய பிரதேச செயலாளர் பிரிவில் இல.39A என்ற ஊருகஸ்மங்ஹந்திய கிராம அலுவலர் பிரிவில் ஊருகஸ்மங்ஹந்திய கிராமத்தில் அமைந்துள்ள "ஊருகஸ்மங்ஹந்திய மானன" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜே.பி. கே. லியனகே அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 356/2013 மற்றும் 2012.12.09 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 09 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி.

இக்காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (0ஏ.0றூ.09பே.) அல்லது 0.0229 ஹெக்டயார் .

விசாலமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடம், இலைகுலை, பழங்கள் ஆகிய அனைத்தும் மற்றும் இந்த காணி எல்பிட்டிய காணி பதிவு அலுவலகத்தில் J52/121 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதன இடாப்பு - 2 ஆவது காணி**

தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தோட்ட வலல்லாவிட கோரளை, கரந்தெனிய பிரதேச சபை எல்லையினுள், கரந்தெனிய பிரதேச செயலாளர் பிரிவில் இல.39A என்ற ஊருகஸ்மங்ஹந்திய கிராம அலுவலர் பிரிவில் ஊருகஸ்மங் ஹந்திய கிராமத்தில் அமைந்துள்ள "ஊருகஸ்மங்ஹந்திய மானன" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜே.பி. கே. லியனகே அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 354/ 2013 மற்றும் 2012.12.09 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் 09 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி.

இக்காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (0ஏ.0றூ.20பே.)

விஸ்தீரணமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடம், இலைகுழை, பழங்கள் ஆகிய அனைத்தும் மற்றும் இந்த காணி எல்பிட்டிய காணி பதிவு அலுவலகத்தில் J169/41 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹாபிடிகம கோரளகே குமுது மல்காந்தி வீரதுங்க மற்றும் துசே தேவ லலித் வீரதுங்க (இதன்பின்னர் "கடனாளி" என அழைக்கப்படும்) அவர்களால் கம்பனி பதிவு இலக்கம் PB 676PQ உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ ( இதன் பின்னர் "யூனியன் பாங்க்" என அழைக்கப்படும்) மூலம் நீண்ட நிதி வசதிகளை மற்றும் பெற்றக் கொண்டுள்ளதாலும் மேற் குறித்த கடனாளியின் மூலம் காலி பிரசித்த நொத்தாரிசு ஏ.என்.டபிள்யூ. குணசேகர அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல.5612 மற்றும் 2014.10.01 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி , அதே நொத்தாரிசு மூலம் உறுதிசெய்யப்பட்ட இல. 6107 மற்றும் 2015.09.09 ஆந் திகதியுடைய ஈட்டு முறியும், அதே நொத்தாரிசு உறுதிப்படுத்தப்பட்ட இல.5613 மற்றும் 2014.10.01 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி மற்றும் அதே நொத்தாரிசு உறுதிப்படுத்தப்பட்ட இல. 6108 மற்றும் 2015.09.09 ஆந் திகதியுடைய ஈட்டு முறியை எழுதி கையொப்பமிட்டு மேற்குறித்த கடன் வசதிகள் யூனியன் பாங்க் மூலம் அறவிடப்பட வேண்டிய மேற்குறித்த கடன்வசதிகளை மற்றும் அதன் மீதுள்ள வட்டிகள் மீள செலுத்துவதற்காக பிணையாக வைத்து மேற்குறித்த ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட அசையா சொத்துக்களை அடகு வைத்து பிணையாக வைத்துள்ளதாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

ஆதன இடாப்பில் காண்பிக்கப்பட்ட 1 ஆவது காணி - 2021, திசெம்பர் 10 ஆந் திகதி பிற்பகல் 1.00மணிக்கு
ஆதன இடாப்பில் காண்பிக்கப்பட்ட 2 ஆவது காணி - 2021, திசெம்பர் 10 ஆந் திகதி பிற்பகல் 1.30மணிக்கு மேற் சொல்லப்பட்ட காணிகளை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்.-** அம்பலாங்கொடயில் இருந்து எல்பிட்டிய வீதியில் மஹ ஏதண்ட சந்தி வரை பிரயாணம் செய்யவும். அங்கிருந்து இடது பக்கத்தில் உள்ள பாதையில் ஊருகஸ்மங்ஹந்திய வரை பிரயாணம் செய்யவும். அங்கிருந்து வலது பக்கம் திரும்பி எல்பிட்டிய வீதியில் 100 மீற்றர் வரை முன்நோக்கி பயணிக்கும் பொழுது இந்த காணி வழி இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதார ருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;
(6) இலிகிதர் கட்டணம் ரூபா 1,500.00 ;
(7) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,500.00.

இந்த ஏல விற்பனை சுகாதார அமைச்சு மூலம் கொவிட் 19 சம்பந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெறும்.

**வேறு விபரங்களுக்கு.-**"சட்டத் திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல.64, காலி வீதி, கொழும்பு 3.
தொலைபேசி இல.: 0112-2874100.

எல்.பி. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல்மாகாணம் அரச
மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,கொழும்பு 12.
தொலைபேசி /தொலைநகல் இல. : 077- 3242954,
011-2445393.

11- 396

---

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை

### ஆதன இடாப்பு

**1 ஆவது காணி**

